# உங்கள் பயனோக்கு கட்டணங்களை நிர்வகித்தல்

## பயனோக்கக் கட்டண உதவி

பயனோக்கு நிறுவனங்கள் தங்கள் வாடிக்கையாளர்கள் உதவிக்குத் தகுதிபெறும் பட்சத்தில் அவர்களுக்கு உதவமுடியும். மேலும் விபரங்களுக்கு உங்கள் பயனோக்கு நிறுவனத்தை தொடர்புகொள்ளவும்.

## மின்சாரத்தை மிச்சப்படுத்தி, பணத்தை மிச்சப்படுத்துங்கள்

வீட்டில் நீங்கள் அதிக நேரம் செலவிட்டால், உங்கள் பயனோக்கப் பயன்பாடும் அதிகரிக்கும். விளக்குகளை அணைத்தல், பவர் ஸ்டிரிப்புகளைப் பயன்படுத்துதல், குழாய்கள் அல்லது ஜன்னல்களில் கசிவுகளை அடைத்தல் மற்றும் வெப்ப சீர்படுத்தியை சரிசெய்தல் போன்ற எளிய நடவடிக்கைகளை மேற்கொண்டு பெரியளவில் மின்சாரத்தை சேமிக்கலாம்.

## அவசர உதவி தொலைபேசி மற்றும் இணையத்தொடர்பு சேவைகளுடன் தொடர்பில் இருங்கள்

தொலைபேசி அல்லது இணைய சேவைகளுக்கு கட்டணம் செலுத்த உதவி தேவையெனில், உங்கள் தொலைபேசி நிறுவனத்தையோ அல்லது வடமில்லா பங்கேற்பு இணையதொடர்பு நிறுவனத்தையோ தொடர்புகொள்ளவும். மத்திய அரசின் நிதியளிக்கப்பட்ட அவசர உதவித் திட்டம் குறைந்த வருவாயுள்ள தனி நபர்களுக்கு தொலைபேசி சேவைகளில் தள்ளுபடிகளை வழங்குகிறது. அவசர உதவி சந்தாதாரர்கள் வீட்டுக்கு அல்லது அலைபேசி சேவைக்கு அல்லது அதிவேக அகண்டவரிசை இணையத்தொடர்புக்கு பலன்களைப் பெற விண்ணப்பிக்கலாம். மேலும் விபரங்களுக்கு www.lifelinesupport.org (இணையதளம் ஆங்கிலத்தில் மட்டும், விண்ணப்பம் ஸ்பானிய மொழியில் கிடைக்கிறது).

## இப்போதே உதவி பெறுங்கள்

உங்கள் கேள்விகள், கவலைகள் மற்றும் நிறுவன புகார்கள் குறித்த உதவிக்கு திங்கள் முதல் வெள்ளிவரை காலை 8 முதல் பின்மதியம் 5 வரை 1-888-333-WUTC (9882) என்ற எண்ணிலும், எங்கள் இணையதளத்தில், நேரடி உரையாடல் மூலம் அல்லது consumer@utc.wa.gov என்ற மின்னஞ்சலிலும் எங்களை தொடர்புகொள்ளலாம். மேலும் தகவல்கள், புகார் படிவங்கள், மின் சேமிப்பு

உதவிக்குறிப்புகள் மற்றும் COVID-19 குறித்த முக்கிய புதுப்பித்தல்களுக்கு எங்கள் இணையதளத்துக்கு வருகை தருக.

வேறொரு வடிவத்தில் இந்தத் தகவல் தேவையா? 1-800-833-6384 என்ற எண்ணிலோ அல்லது வாஷிங்டன் அஞ்சல் சேவைகளின் வாயிலாக உரை தொலைவழி தட்டச்சுக்கு (TTY) 711 என்ற எண்ணையோ அழைக்கவும்.

UTC பல மொழிகளில் உங்களுக்கு உதவ முடியும். 1-888-333-9882 என்ற எண்ணை அழைத்து ஒரு மொழிபெயர்ப்பாளரைக் கேளுங்கள்.